DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -350/2025

Prosecution PW -10

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.வனிதா | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 30.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1, A3, A4, A5 absent. 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை

நான் தற்பொழுது திருச்சி பொருளாதார குற்றப்பிரிவு சிறப்பு புலனாய்வு குழுவில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.08.2023ம் தேதி திருவையாறு வட்டக் காவல் ஆய்வாளராக இருந்தபோது, சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவர் குற்ற எண்.261/2023 இதச பிரிவு 147, 148, 341, 294 (பி), 307ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மேல் விசாரணைக்கு என் பார்வைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் சதீஷ்குமார், ஜெனார்தனன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தேன். பார்வை மகசர் ஏற்கனவே அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது மாதிரி வரைபடம் அதசாஆ**.9.** பின்னர் சாட்சிகள் ஜெனார்தனன், சதீஷ்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையிலிருந்த புகார்தாரர் கிருபாணந்தம், அப்புசாமி, பிரபுநாத், இளங்கோவன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 16.00 மணிக்கு விளாங்குடி பஸ்ஸாடப் அருகில் 1வது எதிரி துளசிராமன், 2வது எதிரி செல்வம், 3வது எதிரி அருண் (எ) கார்த்திகேயன், 4வது எதிரி சதீஷ்குமார் ஆகியோரை கைது செய்து சாட்சிகள் காமராஜ் மற்றும் விஷ்வநாதன் முன்னிலையில் விசாரிக்க 1வது எதிரி துளசிராமன் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு

பயன்படுத்திய அருவாளை வைத்தியநாதன் பேட்டை, கொள்ளிடக்கரை அருகிலுள்ள சுடுகாட்டு முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாகக் கூறி அங்கு அழைத்துச் சென்று எதிரி எடுத்து ஆஜர் செய்த அதே சாட்சிகள் முன்னிலையில் 18.15 மணிக்கு மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ**.10.** பின்னர் எதிரிகள் மற்றும் தடயச்சொத்துடன் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன. கைப்பற்றிய அருவாளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் காமராஜ், விஸ்வநாதன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்ட கிருபானந்தம், அப்புசாமி ஆகியோருக்கு சிகிச்சை செய்து விபத்து பதிவேடு வழங்கிய மருத்துவர் செந்தில்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்து பதிவேடு பெற்றேன். அந்த விபத்து பதிவேடுகள் ஏற்கனவே அதசாஆ.4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் காயம்பட்ட கிருபானந்தம் மற்றும் அப்புசாமிக்கு சிகிச்சை அளித்து காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் அபிசேக் மண்டல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயச்சான்றிதழ் பெற்றேன். அந்த காயச்சான்றிதழ்கள் ஏற்கனவே அதசாஆ.6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் முதல் தகவல அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் அவர்களை வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவு 147, 148, 341, 294 (பி), 307 இருந்து இதச பிரிவு 147, 148, 341, 294 (பி), 307, 120(பி), 34 ன் கீழ் பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்று அறிக்கை சமர்பித்தேன். அந்த பிரிவு மாற்று அறிக்கை அதசாஆ**.11.** 5 வது எதிரி முருகானந்தம் நீதிமன்ற பிணையில் சென்றதால் இத்துடன் என் விசாரணையை முடித்து 1 வது எதிரியின் மீது இதச பிரிவு 147, 148, 341, 294 (பி), 307, 120(பி), 34 ன் கீழும், 2 முதல் 5 எதிரிகள் மீது இதச பிரிவு 147, 148, 341, 120(பி), 34 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை என்னிடம் வழக்குக்கோப்பை கொடுத்த உடனே அவரை விசாரணை செய்தேன். கிருபானந்தம் விபத்து பதிவேட்டில் தன்னை அடையாளம் தெரிந்த 6 ஆண் நபர்களால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது. அப்புசாமி என்பவரது விபத்துப்பதிவேட்டில் தன்னை விளாங்குடி ரோடு, ஒயின்சாப் அருகே

தன்னை அடையாளம் தெரிந்த ஆண் ஒருவர் வெட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது. விபத்துப்பதிவேட்டில் 6 நபர்கள் உள்ள நிலையில் 5 நபர்கள் மேல் மட்டும் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எங்கள் விசாரணையில் அவ்வாறு தான் கூறினார்கள். விபத்துப்பதிவேட்டில் உள்ள ஒரு நபர் குறித்து முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடமானது ேஹாட்டல் உள்ளே. அதசாஆ.9 மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தின் பக்கத்தில் ஒயின் சாப் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ேஹாட்டல் சமையலறை, கல்லாப்பெட்டி உள்ள ஹால் மற்றும் வெளியே டீ குடிப்பவர்களுகான ஒரு இடம் என்று மூன்று பிரிவாக உள்ளது என்றால் சரிதான். இந்த சம்பவம் சமையலறையில் நடந்ததா, ஹாலில் நடந்ததா என்றால் ஹாலில் நடந்தது. எனது விசாரணையில் அன்று ேஹாட்டலில் தனிநபர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்களா என்றால் அவ்வாறு விசாரணையில் தெரியவில்லை. அ.சா.1 வார்டு கௌன்சிலர் என்றால் சரிதான். நான் கோவிலில் ஏலம் எடுப்பது சம்பந்தமாக டிரஸ்டியையோ அல்லது கோவில் நிர்வாகத்தையோ விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரி துளசிராமன், செல்வம் எடுத்த கோவில் குள குத்தகையை குறித்து கோவில் நிர்வாக அலுவலரிடம் விசாரணை மேற்கொள்ளவில்லை. அதேபோல் கோவில் குள குத்தகை சமயத்தில் சம்பவங்கள் குறித்து எந்த புகாரும் இல்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் யாரால் எழுதப்பட்டது என்று விசாரணை செய்தீர்களா என்றால் அதுகுறித்து விசாரணை செய்யவில்லை ஆனால் ரவிச்சந்திரன் புகார் வாக்குமூலத்தை பதிவு செய்தார். புகார் வாக்குமூலத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் வேறு பேனாவால் கையொப்பம் மட்டும் செய்துள்ளார் என்றால் அவ்வாறு எனக்குத் தெரியவில்லை. முதல் தகவல் அறிக்கையில் காலம் 15 ல் புகார்தாரரின் கையொப்பம் இல்லை என்றால் அவர் மருத்தவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததால் அவரின் கையொப்பம் பெறப்படவில்லை. திருவையாறு காவல்நிலையத்திலிருந்து திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் 2 கிமீ தொலைவில் உள்ளது. 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் எனது மடிக்கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு அருகிலுள்ள கணிணி சென்டரில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது. எனது ஜீப் ஒட்டுநர் போய் பிரிண்ட் அவுட் எடுத்து வந்தார் அவர் பெயர் ஞாபகமில்லை. பிரிண்ட் அவுட் எடுத்தது சம்பந்தமாக கடையின் உரிமையாளரையோ அல்லது எனது ஓட்டுநரையோ சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு பக்கத்தில் தென்புறத்தில்

குருமூர்த்தி காம்பிளக்ஸ் உள்ளது என்றால் சரிதான். அந்த காம்பிளக்ஸில் உள்ளவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் காலை 7.00 மணிக்கு சென்றதால் யாரும் அங்கு இல்லை. அ.சா.3 சதீஸ்குமார் மற்றும் சாட்சி ஜெனார்தனன் ஆகியோர் காயம்பட்ட நபர்களுக்கு நண்பர்களா என்றால் அ.சா.3 சம்பவம் நடந்த ஓட்டல் கடையின் உரிமையாளர், சாட்சி ஜெனார்தனன் அந்த ஓட்டலில் வேலை பார்த்தவர். ஓட்டல்கடையில் சாப்பிட வந்தவர்களையோ அல்லது பக்கதில் உள்ள குருமூர்த்தி காம்பிளக்ஸில் உள்ளவர்களையோ சாட்சிகளாக விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.3ன் ஓட்டல் இரவு நேர ஓட்டல் என்றால் சரிதான். கிருபானந்தனின் இரத்தக்கரை படிந்த சட்டையை என்னிடம் ஒப்படைக்கவில்லை. கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 1வது எதிரியை சொன்ன நாள், நேரம், இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த தடயப்பொருளும் அவரிமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. அதசாஆ.3 கைப்பற்றுதல் மகசர் என்னால் எழுதப்பட்டது. 1வது எதிரி கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து அருவாள் கைப்பற்றிய கொள்ளிடம் ஆற்றுக்கரை சுடுகாடு 5 கிமீ தொலைவில் உள்ளது. 25.08.2023ம் தேதி படிவம் 91 வழக்குச் சொத்தான அருவாளுடன் தாக்கல் செய்யுமாறு நீதித்துறை நடுவரால் திருப்பம் செய்யப்பட்டு 31.08.2023ம் தேதி தான் மீண்டும் படிவம் 91 அருவாளுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வைத்தியநாதன் கொள்ளிடக்கரை சுடுகாடு திறந்தவெளி தான். நான் சரியாக புலன்விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குளம் ஏலம் எடுப்பது குறித்து எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் எந்தவிதமான விரோதமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. குளம் ஏலம் சம்பந்தமாக விரோதம் இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதால் தான் கோவில் நிர்வாகத்தினரிடம் விசாரணை செய்யவில்லை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம், தஞ்சாவூர்